# புறநானூற்றில் புலவர்கள் பேசும் மனிதநேயம்

*முனைவர் பா. வைடூரியம்மாள்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி,
திருநெல்வேலி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5006

***ஆய்வுச்சுருக்கம்***

*மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வின் பல துறைகளில் செம்மையும், சீர்மையும் உடையவர்களாக விளங்கியவர்கள் தமிழர்கள். மன உணர்வுக்கு விளக்கம் சொல்லும்போது, 'சுதக்கது இன்னது தகாதது இன்னதுசுசு என்று பகுத்து உணர்ந்து கடைபிடிக்கும் ஆற்றலே மன உணர்வாகியப் பகுத்தறிவு என்று சொல்லப்படுகிறது. அதாவது, நல்லியல்புகளின் அடிப்படையில் எல்லோருக்கும் ஏற்றம் தருவதாக அமைவதே வாழ்க்கை என்றும், அதைச் சிதைக்கின்ற நடவடிக்கை எதையும் வளர விடக்கூடாது என்றும், அக்காலத் தமிழர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த இணக்கநெறி நடைமுறைக்குத்தான் இப்போது மனிதநேயம் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் ஒரு சமுதாயப் பிராணி என்று சொல்லப்படுவதன் கருத்தும் அவன் மனிதநேய உணர்வுடையவனாக வாழ வேண்டும் என்பதற்காகவே ஆகும். இத்தகைய வாழ்க்கை நடைமுறைகளைப் புறநானூற்றில் பல புலவர்கள் புலப்படுத்தி இருக்கிறார்கள். வாழ்க்கையில் மனிதநேயப் பண்புக்கே தனிச்சிறப்பிடம் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார்கள். அதனைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *ஆளுமை, இனக்குழு, சமூக அமைதி, சமூக அமைப்பு, சமூக உளவியலார், நட்பு, பரிணாமம், மனிதநேயம், மனித மதிப்புகள், விழுமியப் பண்புகள்.*

## முன்னுரை

மனிதன் என்ற சொல்லானது மனம் என்ற வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். இத்தகைய மனதை உடையவன் தான் மனிதனாகிறான். மனதின் பலவகை எண்ணங்கள் ஒருவனை மனிதனாக்குகின்றன. இத்தகையச் சிறப்புப் பெற்ற மனிதனின் பண்புகளை வெளிப்படுத்து வது மனிதநேயமாகும். சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை மனிதநேயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

சங்க காலத்தில் புலவர்களுக்கும், அறிஞர்களுக்கும் சிறப்பான மதிப்பு இருந்து வந்தது என்றாலும், எல்லாக் காலத்திலும் எல்லாப் புலவர்களுக்கும் அத்தகையச் செல்வாக்கு இல்லை என்பதையும் காண முடிகிறது. ஆனாலும் புலவர்கள் எந்த நிலையிலும் மனித நேயத்துக்கு மாறான செயல்களுக்கு, எதிர்க்குரல் எழுப்பியே வந்துள்ளார்கள்.

ஏனெனில் தமிழ் முன்னோர்கள் மனித நேயத்தை மாண்புற மதித்தவர்கள். அது சிதைக்கப்படும்போது சீறி எழுந்தவர்கள். அவ்வாறு எழுந்து கொள்ள முடியாத போதும், மற்றவர்களின் இரக்க உணர்வைத் திரட்டியும், தங்கள் உயிரையே அள்ளிக்கொடுத்தும், மனித நேயத்துக்கு வாழ்வு கொடுக்க முன்நின்றவர்கள். இத்தகைய உணர்வுகளைச் சங்க இலக்கியங்களில் பாடியும் பதிவு செய்துள்ளனர். அந்த வகையில் எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் புலவர்கள் பேசும் மனித நேயத்தை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## மனிதம் – மனிதநேயம் விளக்கம்

மனிதன் மற்ற உயிர்களிடம் காட்டும் அன்பு மனிதநேயமாகும். "நேயம், நேசம் என்ற சொல்லுக்கு அன்பு"[1] என்று தமிழ் இலக்கிய அகராதி பொருள் தருகிறது. "சமூகவியல் நூலார் இருவகை மனித நேயங்களைக் காட்டுகின்றனர். ஒன்று மனித இனநலம் காக்கும் முற்போக்கான மனித இன நலக்கோட்பாடு. இது மேல்நாடுகளில் சமயத்துறையின் கட்டுப்பாடுகளுக்கு எதிராகக் கி.பி.பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றியதாகும். இரண்டு மார்க்சிய இனநலக் கோட்பாடு. இது வர்க்க இனச் சார்பாளர்களையும், சுரண்டும் சக்திகளையும் வேகமாக எதிர்த்தது. மார்க்சிய மனிதநேயம் என்பது சுரண்டப்படுகிற உழைக்கும் வர்க்கத்திற்கும், நசுக்கப்பெற்ற இனத்திற்குமான ஆதரவுச் செயலாகும்."[2] இந்த அடிப்படையிலான ஓர் இயக்கம் சார்ந்த மனித நேயத்தைப் புறநானூற்றில் காண இயலாது. ஆனால் கொடை, ஒப்புரவு, போன்ற பொதுநல மனித நேயத்தைக் காணமுடிகிறது.

புறநானூற்றில் பல மனிதநேய மாண்புகள் பேசப்பட்டுள்ளன. வறுமையில் வாடிய புலவர்களைத் தக்கப் புரவலர்களிடம் ஆற்றுப்படுத்திய புலவர்களின் மனிதநேயம், தம்மை நாடி வருவோர்க்கு வள்ளன்மையால் வாரி வழங்கிய ஆட்சியாளர்களின் மனிதநேயம், போரில் வென்றவர் தோற்ற அரசனையும், அவனது வீரர்களையும் மனிதநேயத்துடன் நடத்திய பாங்கு, மனித உயிர்கள் போரில் மாண்டு விடக்கூடாது எனச் சந்து செய்வித்தச் சான்றோர்களின் மனிதநேயம் எனப் பல மனித நேய மாண்புகள் கூறப்பட்டுள்ளன.

## இனக்குழுத் தலைவன் மாண்பு

புறநானூற்றின் பல பாடல்களில் இனக்குழு வாழ்க்கை பேசப்படுகிறது. கிடைப்பதை அனைவரும் வேறுபாடில்லாமல் பகுத்துண்டதை விளக்குகிறது. தலைவனுக்கு என்று தனிஉரிமை இல்லாதிருக்கின்றது. இனக்குழுத்தலைவன் தோலிலும் பாயிலும் படுத்துறங்குபவனாகவே காணப்படுகிறான்.

**"நாட் செருக்கனந்தர்த் துஞ்சுவோனே**
**அவனெம் இறைவன் யாமவன் பாணர்"**[3]

என இப்புறப்பாடலில் போற்றப்படும் தலைவன் துடைப்பத்தால் தூத்தப்பெறாத சருகுமிக்க முன்றிலில் உறங்குபவன். நேற்று வந்த விருந்தினர்க்காகத் தன் பழைய இரும்புவாளை அடகு வைத்தவன். இவ்வாறு பொருள் இல்லாமையிலும், தன் சமூகத்தினர் வறுமையால் வாடும்போது முயற்சியால் பொருள் தேடிக் கொடுக்கும் தன்மையும் தலைவனின் தகுதிகளாகக் கருதப்பட்டிருக்கின்றன. இதனை உயர்ந்த மனித நேயமாகக் கருதியிருக்கின்றனர்.

## மனித மாண்பு

மனிதன் ஒரு சமூக விலங்காவான். இதனைச் சமூகவியலாளரும், "எந்த மனிதனும் ஏதோ ஒரு சமூக அமைப்பில் உறுப்பினனாக இருந்தாக வேண்டும். இதை மனிதனுடைய சமூக இயல்பு (Sociability) என்பர்"[4]. சமூக அமைப்பின் பொதுநலனுக்காக, அதன் உறுப்பினனாக ஒவ்வொருவனும் தன் விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்து விட்டு, மனித நேயத்தோடு இருப்பதிலேதான்

சமூகத்தின் கட்டுக்கோப்பு இருக்கின்றது. இதனைப் புறநானூற்றின் பல பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**"உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே**
**பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே**
**செல்வத்துப் பயனே யீதல்"[5]**

என்னும் இப்பாடலில் அரசர்க்கும் ஆனிரை மேய்ப்பவர்க்கும் இடையேயான தனி வாழ்க்கை நிலை கூறிப் பின்னர் பொதுச் சமூக கண்ணோட்டமும் வற்புறுத்தப்பட்டுள்ளது. தனி மனிதன் ஒருவன் பசித்திருக்கிறான் என்பதைவிடச் சமூகத்தின் ஓர் உறுப்பு பசித்திருக்கிறது என்ற உணர்வே இப்பாடலின் அடித்தளமாக அமைகிறது.

பண்டைத் தமிழகத்தில் உண்டி கொடுத்து உயிர் பாராட்டிய பண்பு பெரிதாகப் போற்றப்பட்டது. தனிமனித வாழ்வில் பொருள் தேடலும் இன்பந்துய்ப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கின்றன. இதில் எதனை மேற்கொள்வது என்கின்ற மனப்போராட்டமும் உண்டாகியிருக்கின்றது. எனினும் பொருள் தேடியபின் இன்பம் துய்த்தல் என்ற நியதியே பெரிதும் பின்பற்றப்பட்டிருக்கிறது.

தேடிய பொருளை பசித்திருப்போர்க்கும், வறியவர்க்கும் வழங்குவதிலே பெருமை கொண்டிருக்கிறது. குறிஞ்சிப்பாட்டில் வாழ்க்கையின் தலையாயப் பயனே விருந்தோம்பல் தான் என்று கூறப்படுகிறது. பொருளை விற்றுக் காசாக்கி அதனைச் சேமிக்க முடிந்த சமூகத்தில் கொடைப்பண்பும் பேசப்படுகிறது. விருந்தோம்பல் என்பது நல்வினைப் பயனால் செய்யும் அறச்செயலாகப் போற்றப்படுகிறது.

உதியஞ்சேரல் என்னும் ஓர் அரசன் போரில் வென்றான். தன் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஓர் அட்டிலை உண்டாக்கினான். அது உதியன் அட்டில் எனப் பெயர் பெற்றது. வரியவர்க்குப் பெருவிருந்தாக அது அமைந்தது. ஊரார்க்கும், உணவின்றி வாடியோர்க்கும் பசி போக்கியது. இவற்றால் மனிதநேயம் என்பது மனிதர் தம்மைச் சார்ந்த மற்றையோர்க்கும் உதவுதல் என்பது புலப்படுகிறது.

### அறத்தின்வழி அன்பு

குடும்பக் கடமைகளில் மட்டுமின்றிப் பிற துறைகளிலும் அன்பின் இன்றியமையாமை பேசப்படுகிறது. அரசன் தன் அவைக்களத்தை அன்புடைய அவைக்களமாகவே கண்டிருக்கிறான். அறத்தைக்கூட அன்பின் அடிப்படையில் அணுகுதலே கடமை என்று கூறப்பட்டிருக்கிறது.

**"மன்பதை காக்குநின் புரைமை நோக்காது**
**அன்பு கண்மாறிய அறனில் காட்சியொடு**
**நும்மனொரும் மற்றினையராயின்**
**எம்மனோர் இவண் பிறவலர் மாதோ"[6]**

என்று வேந்தனும் அன்பு மாறாமல் அறஞ்செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இதன்வழி மனிதன், அன்பு என்ற மனிதநேயத்தின் அடிப்படையில் இயங்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

### ஒற்றுமை கண்டு மகிழும் மனம்

உற்றார் உறவினரிடையேயும், ஒரே குடியைச் சேர்ந்தவர்களிடையேயும், பகைமை படர்வது அவர்களிடையே நிலவ வேண்டிய மனிதநேய உணர்வை மாய்த்துவிடும் என்று கருதி அத்தகையச் சூழ்நிலை உருவாகாமல் விரைந்து தடுத்திருக்கிறார்கள் புலவர்கள்.

சோழ நாட்டை ஆண்டுவந்த திருமாவளவனும், பாண்டிய நாட்டை ஆண்டு வந்த பெருவழுதியும் ஒற்றுமையாக இருப்பதைப் புலவர் காரிக்கண்ணனார் புகழ்கிறார். இருவரும் தங்கள் தங்கள் அளவில் அரிய சாதனைகளைப் புரிந்தவர்கள். அதனாலேயே நல்ல தாமரைக் குளத்தில் அன்னம் சேர்ந்திருப்பது போல் ஒற்றுமை என்னும் பொய்கையில் இணைந்து, மனிதநேயம் என்னும் அழகு மலர்களாக மலர்ந்திருக்கிறார்கள் என்கிறார்.

அரசர்கள் தங்கள் பெருமையை நிலைநாட்டிக்கொள்ள ஒருவர் மற்றவர்மேல் பாய்வது அக்காலத்திய நடைமுறையாக இருந்தது. அதற்கு மாறாக இந்த இரண்டு சாதனையாளர்களும் ஒன்றிணைந்து வாழ்ந்தார்கள் என்றால் அவர்கள் இருவரின் இதயத்திலும் ஊறி உயர்ந்த மனிதநேய நல்லுணர்வே காரணம் எனலாம்.

**மனிதநேயம் வலியுறுத்தல்**

பண்டையக் காலத்தில் மனிதநேயம் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

**"யாவார்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை**
**யாவார்க்குமாம் பசுவிற்கொரு பச்சிலை"[7]**

என்கிறது திருமந்திரம். இது சமய வழிபாட்டைத் தாண்டி, அடிப்படையில் மனிதவாழ்வு என்னும் பெரிய அமைப்பை உருவாக்கிக் கட்டிக் காப்பதில் மனிதர் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் உதவ வேண்டும் என்ற மனிதநேயத்தைக் கூறுகிறது.

புறநானூற்றில் நல்லது செய்தல் ஓம்புமின், அதுதான் எல்லாரும் உவப்பது என்று வலியுறுத்தப்படுகிறது. அத்துடன் நின்றுவிடாமல் அதற்கு மேம்பட்ட நல்லடி ஒன்றையும் கூறுகிறது.

**"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்"[8]**

என்று தீயவழியிலே திரும்பிவிட்டவர்கள் கை கழுவப்பட வேண்டியவர்கள் அல்லர், கை கொடுத்து நல்ல வழியிலே நடத்தப்பட வேண்டியவர்களே என்னும் மனிதநேய நன்னோக்கையும் காட்டுகிறது. தீ நெறிப்பட்ட அவர்களும் நன்னெறிக்குத் திரும்ப வேண்டும். அதனால் மனிதநேயம் வளரும் என்கிறது.

**"எத்துணை யாயினும் ஈத்தல் நன்று என**
**மறுமை நோக்கின்றோ அன்றே**
**பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே"[9]**

என்று கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகனை வியந்து பேசுகிறது இப்பாடல். பேகனின் கை வண்ணம் மற்றவர்களின் வறுமையைக் களைவதையே நோக்கமாகக் கொண்டது என்கிறது. இது முழுக்க முழுக்கப் பிறர் நலத்தை அடிப்படையாகக் கொண்டது. இதுதான் மாசற்ற மனிதநேயமாகும்.

மனித வாழ்க்கையைப் பொறுத்தவரைச் சான்றோர்கள் என்பவர்கள் வீட்டுக்கு உறுதித் தூண்களும், காட்டுக்கு உயர் மரங்களும் போன்றவர்கள். ஏனெனில் ஒருவன் தன்னிடம் உதவி கேட்டு வரும்போது தன்னிடம் பொருள் இருக்கிறதா, இல்லையா என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. தன்னுடைய வறுமை நிலையை மட்டுமே அவன் நினைக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்பதையே புறப்பாடல் கூறுகிறது. அலத்தற்காலை ஆயினும் புரத்தல் வல்லன் என ஒருவனைப் பாராட்டுவதன் மூலம் மனித நேயத்தை வளர்க்க முடியும் என்கிறது.

**மனிதநேயத்துக்கு மாறாகப் பொங்குதல்**

மனிதநேயத்துக்கு ஒவ்வாத கொடுமைக்கு எதிராக வஞ்சினம் மொழிந்து அதை நிறைவேற்றிய தமிழர்களின் வரலாறு தனித்து உயர்ந்த இடம் பெறுகிறது. அதில் அன்னிமிஞிலி என்னும் சாதாரண இடைக்குலப் பெண்ணின் புகழ் வரலாற்றில் முதன்மையிடம் பெறுகிறது.

கோசர் என்னும் ஓர் இனத்தினர் தமிழகத்திலே புகுந்து சிலகாலம் அதன் சில பகுதிகளை ஆட்சி புரிந்தனர். ஒன்று மொழி கோசர், வாய்மொழிக் கோசர் என்றெல்லாம் பாராட்டப்பட்ட அவர்கள் நீதி வழங்குவதில் மிகவும் இறுக்கமாக நடந்து கொண்டார்கள். ஒரு சமயம் அன்னிமிஞிலியின் தந்தை மேய்த்துவந்த மாடுகள், ஒருவரின் வயலில் புகுந்து பயிரை அழித்துவிட்டன. செய்தி கோசர்களின் அறமன்றத்திற்கு எட்டியது. வழக்கை விசாரித்த நடுவர்கள் மாடு வயலில் புகுந்ததைப் பாராமல் பயிரின் அழிவுக்

குக் காரணமாக இருந்த இவனுடைய கண்களைப் பிடுங்கிவிட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

தீர்ப்பைக் கேட்டு அன்னிமிஞிலியும் அவளது தந்தையும் அற மன்றத் தலைவர்களின் காலில் விழுந்து செஞ்சி, தண்டணையைக் குறைக்கும்படியாக மன்றாடினார்கள். கோசர்கள் கொஞ்சமும் கருணை காட்டாமல் தண்டணையை நிறைவேற்றித் தீர்த்து விட்டார்கள். மனிதநேயத்தையே மண்மூடிப் புதைக்கும் அந்த வன்செயலைக் கண்டுப் பொங்கி எழுந்தாள் அன்னிமிஞிலி. என் தந்தையின் கண்ணைப் பிடுங்கியவர்களைப் புண்டோடு ஒழித்துக் கட்டாமல் நான் நல்உணவு உண்ணமாட்டேன். நல்லாடை உடுத்தவும் மாட்டேன் என்று வஞ்சினம் மொழிந்தாள். அன்னிமிஞிலியைப் பற்றிய இந்தச்செய்திதான் மனிதநேயத்திற்கு மாறான வன்கொடுமைகளைத் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்கள் என்னும் உண்மையை எடுத்துரைக்கிறது. மன்னர்களும் மறவர்களும் கோபம் கொள்ளும் தகுதி உடையவர்கள். காரணம் தங்களுக்குச் சினம் மூட்டிய பகைவர்களைத் தாக்கி அழிக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. அப்படிப்பட்ட ஆற்றலோ தகுதியோ எதுவும் இல்லாத சாதாரணப் பெண்ணான அன்னிமிஞிலியின் கோபம் ஓர் இனத்தையே அழித்துத் துடைத்து விட்டது என்றால் பொதுவாகவே தமிழர்கள் மனிதநேய ஒழிப்புச் செயல்களை மாபெரும் அழிவுச் செயல்களாகக் கருதி இருந்தார்கள் என்பதை அறியமுடிகிறது.

கிள்ளிவளவன் தன் எதிரியாகிய மலையமானை வென்று அவனுடைய மக்கள் இருவரையும் சிறைபிடித்தான். கிள்ளிவளவனின் செயல் அந்தப் போர் அறத்தின் எல்லையை மீறி விட்டது. தன்னைப் போன்ற ஓர் அரசனின் அந்த இளம் மக்களை யானையைக் கொண்டு மிதிக்கச் செய்வது என்று மனிதநேயமே வற்றிப்போன ஒரு கொடிய முடிவுக்கு வந்துவிட்டான் சோழ மன்னன். இதைக் கேள்விப்பட்ட புலவர் கோவுர்கிழார், சற்றும் தயங்காமல் இவன் முன்னால் மனிதநேயமற்ற செயலுக்காகக் குரல் கொடுத்தார் (புறம் - 46).

ஒரு பெரிய அறம் என்பது தன்னோடு தொடர்புடைய வேறு பல பெரிய உணர்வுகளை எழுப்பக்கூடியது என்பதை இவரின் வேதனைக் குரலின் மூலம் வெளிப்படுகிறது. மலையமான் மக்களை யானைக்கிடும் கொடுமையிலிருந்தும், வேந்தரைத் தம் அறிவுரையால் தடுத்து நிறுத்தி அவர்களை உய்யக்கொண்ட ஒரு மனிதநேய உணர்வைக் காணமுடிகிறது.

## தொகுப்புரை

1. தனக்காகவும் தன்னுடைய வெற்றிக்காகவும் போரிட்டுப் புண்பட்ட வீரர்களைத் தன்னுடைய உடம்பின் ஓர் உறுப்பாகவே கருதவேண்டும் என்னும் மனிதாபிமான உணர்வு புலப்படுகிறது.
2. என்னைப் பழித்த என் எதிரிகளை வெற்றி கண்டு மேம்படாவிட்டால் நான் இன்னின்னவாறு இழப்புகளுக்கு உரியவன் ஆவேன் ஆக என்று வஞ்சினம் மொழிகின்ற மன்னவன் கூட மனிதநேய நிகழ்ச்சிகளை இழப்பதையே வாழ்வின் பெரிய இழப்பாகக் கருதுகிறான் என்பதை காண முடிகிறது.
3. மனிதநேயத்துக்கு ஒவ்வாத கொடுமைக்கு எதிராக வஞ்சினம் மொழிந்து அதை நிறைவேற்றியவர் தமிழர்கள் என்பதை புறம் எடுத்துரைக்கிறது.
4. தனிமனித வாழ்வில் இன்பம் துய்த்தலும், பொருள்தேடலும் முக்கியமானதாக இருந்தாலும் பொருள்தேடி வறுமையில் வாடுபவர்க்கு வழங்குதல் என்னும் மனிதநேயப் பண்பை கடைபிடித் திருக்கிறார்கள்.

5. ஒவ்வொருவரும் தன் விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிவிட்டு மனிதநேயத்தோடு இருப்பதிலேதான் சமூகத்தின் கட்டுக்கோப்பு இருக்கின்றது என்பதை புறநானூற்றில் பல புலவர்கள் புலப்படுத்தி இருக்கிறார்கள்.

## முடிவுரை

1. சேர, சோழ, பாண்டிய நாடுகள் எனப் பிரிக்கப்பட்டிருந்த பழந்தமிழகத்தில் மக்களிடையே இப்பாகுபாடுகள் ஆழமான பிரிவினைகளை ஏற்படுத்தவில்லை. தம் மன்னன் ஏவியபோது பிற படைகளோடு சண்டையிட்டனர் என்பதைத்தவிர இனச்சண்டைகள் போட்டதாக அறியப்படவில்லை.
2. தமிழர்கள் எந்த நிலையிலும், ஒரு குடிக்கோ ஒரு தனிமனிதனுக்கோ எதிராக இழைக்கப்படும், மனிதநேயத்துக்கு எதிரான கொடுமைகளைப் பொறுக்கவே மாட்டார்கள் என்னும் உண்மையைப் புறப்பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.
3. தனிமனித வாழ்க்கையில் உவப்பு, சலிப்பு, நட்பு, பகை, விருப்பு, வெறுப்பு ஆகிய பல்வேறு உணர்ச்சிகளும் இடைபெற்றிருந்ததைப் புறநானூறு எடுத்துரைக்கிறது. அதேநேரத்தில் சமூகப் பொதுமைக்காகவும், பிறர் பழியாமைக்காகவும், நாணத்தின் பொருட்டும் தீய உணர்ச்சி களைத் தம்மிடமிருந்து விலக்கிக் கொண்டு மனிதநேயத்துடன் நடந்து கொண்டதையும் வெளிப்படுத்து கின்றன.
4. தனக்கும் தன் மனைவி மக்களுக்கும் என்று வாழ்ந்த தனி வாழ்க்கையிலிருந்து ஊரும் நாடும் சமூகமும் தன்னால் பயன்பெறற்குரிய ஒரு வாழ்வை மேற்கொள்ளும் நிலையையும் காணமுடிகிறது.

## சான்றெண் விளக்கம்


1. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், தமிழ் இலக்கிய அகராதி, (ப.257), ஸென்ட்ரல் புக் டிப்போ, திருவல்லிக்கேணி - 1957
2. Howard J. Sherman, Sociology Traditional and Redical perspectives (P.381 – 382) New York – 1979.
3. புறநானூறு மூலமும் உரையும் (பா. எண் - 316), நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர், சென்னை- 2007
4. பாஸ்கல் கில்பர்ட், ஜெ. நாராயணன் (மொ.பெ), சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் (ப.69), தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை - 1964.
5. புறநானூறு (பா.எண் - )
6. மேலது
7. புலவர் அடியன் மணிவாசகன், திருமந்திரம் மூலமும் எளிய உரையும் (பா.எ . 252), சாராதா பதிப்பகம், சென்னை . 2018
8. புறநானூறு மூலமும் உரையும் (பா.எண் -195)
9. புறநானூறு மூலமும் உரையும் (பா.எண் 141)